தமிழ்மணம்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

Tamilmanam International Research Journal of Tamil Studies
E-ISSN: 3049-0723 & P-ISSN: 3107-7781
Volume 7, Number 01, January 2026

# Shiva's Philosophy of Dance: Spirituality and Aesthetics

**Dr. Thakshayiny Paramadevan*,**
*Senior Lecturer, Department of Dance, Drama&TheatrerArts,*
*Swamy Vipulananda Institute Of Aesthetic Studies, Eastern Univeersity, Srilanka.*
*Mobile number: 0775622370*

***Corresponding Author** Email: thakshayinip@esn.ac.lk,

**ARTICLE INFO**
*Article history:*
Received
December 20, 2025
Revised
December 25, 2025
Accepted
December 30, 2025
Published
January 01, 2026

**ABSTRACT**

Shiva's dance is not merely an artistic performance; it is a profound spiritual expression that symbolizes the cosmic processes governing the universe and human existence. In the Shaiva tradition, Shiva manifests as Nataraja, whose Tandava embodies the five divine acts (Pancha Krityas): creation (Srishti), preservation (Sthiti), destruction (Samhara), concealment (Tirobhava), and grace (Anugraha). Through dance, these cosmic functions are communicated in a form that is accessible to human perception. Every bodily movement, footwork, and hand gesture in Shiva's dance signifies deep metaphysical concepts. The image of Nataraja worshipped at the Chidambaram temple, centered on the principle of Akasha (space), represents the highest expression of the philosophy of dance. The suppression of the demon Apasmara symbolizes the destruction of ignorance, while the raised foot signifies liberation (moksha). The ring of fire (Prabhamandala) surrounding Shiva represents the cyclical nature of time and cosmic energy, creating a powerful aesthetic experience. These visual and symbolic elements evoke rasa (aesthetic emotion) in the viewer, enabling spiritual realization through artistic appreciation. Shiva's philosophy of dance is deeply reflected in Tamil Shaiva literary works such as Thiruvilaiyadal Puranam, Tevaram, and Thiruvasagam. In these texts, Shiva's divine play (lila), in which he mingles with devotees and performs dance, highlights his compassion, simplicity, and grace. Dance thus becomes a medium that strengthens the bond between the divine and the devotee. Therefore, Shiva's philosophy of dance may be understood as a sublime synthesis of spirituality and aesthetics.

**Key words**: *Shiva, Philosophy of Dance, Nataraja, Tandava, Spirituality, Aesthetics, Shaiva Siddhanta, Thiruvilaiyadal Puranam.*

## References:

01. Arumuganavalar, Srilasree. (1957), Thiruvilayadal Purana Vasanam (First Edition). Chennaipattinam: Vidhya Noopalanayandrasalai.
02. Rahuman, Dr. (2008). Dance Art Glossary. Chennai: Chitra Press.
03. Kumaraguruparar. (1965). Explanation of the Law (First Edition). Chennai: Chennaipattinam Taramani.
04. Kulendran, Gnana Dr. (1994), Bharata Isai Venga (First Edition). Thanjavur 05: Tamil University.
05. Kailasanatha Gurus, Ka. M.A.ph.D. (1963). Saiva Temple Rituals. Chettiar Street Colombo: AVRA Buildings.
06. Shanmuga Sundaram, So. (2008). Sirkazhi Moovar Kirthanaikal, Chennai: Rohini Publishing House.
07. Sivathamizhon, S. (1965). Explanation of Saiva Siddhanta. Chennai: Narmada Publishing House.
08. Srinivasan, R. (1998). Thiruvilayadal Puranam (Second Edition). Chennai: Chitra Press World.
09. Subparamania Iyer, N. (1955) The Secret of Chidambaram. Chennai Publishing House.
10. Swami Vedhachalam, (1958). A study of Sivajnanapotha. Tirunelveli: South Indian Saiva Siddhanta Book Publishing Society.
11. Chornalingam, S. (2013), Ezhisaiyai Isaipayanai (First edition). Colombo: Sivathirumandram.
12. Paranchyothi Munivar, Thiruvilayadal Puranam (Second Edition). Viveka Bharsha Printing House.

Journal Homepage: https://tamilmanam.in/journal/
This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/

# சிவனின் கூத்துத்தத்துவம்: ஆன்மிகமும் அழகியலும்

* **கலாநிதி தக்ஷாயினி பரமதேவன்,** சிரேஷ்ட விரிவுரையாளர், நடனநாடகத்துறை, சுவாமி விபுலாநந்தா அழகியற்கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

சிவனின் கூத்து என்பது வெறும் நடன வடிவமல்ல; அது பிரபஞ்ச இயக்கங்களின் ஆன்மிக விளக்கமாகவும்> மனித வாழ்வின் தத்துவ உணர்வாகவும் விளங்குகிறது. சைவ மரபில் சிவன் நடராஜராக வெளிப்படும் போது> அவனது தாண்டவம் சிருஷ்டி (படைப்பு)> ஸ்திதி (பாதுகாப்பு)> ஸம்ஹாரம் (அழிவு)> திரோபாவம் (மறைவு)> அனுக்ரகம் (அருள்) ஆகிய பஞ்சகிருத்தியங்களை ஒருங்கே வெளிப்படுத்துகிறது. இவ்வியக்கங்கள் அனைத்தும் கூத்து வழியாக மனித மனத்திற்கு உணர்த்தப்படுகின்றன. கூத்தின் ஒவ்வொரு அங்க அசைவும் பாதசஞ்சாரமும் கையசைவுகளும் ஆன்மிகச் சிந்தனைகளின் குறியீடுகளாக அமைந்துள்ளன. சிதம்பரக் கோயிலில் வழிபடப்படும் நடராஜர் உருவம்> ஆகாசத் தத்துவத்தை மையமாகக் கொண்டு> 'சபேசன்' எனும் கூத்துத் தத்துவத்தின் உச்ச நிலையை வெளிப்படுத்துகிறது. அப்பாவம் அடக்கப்பட்ட அபஸ்மார புருஷன் அறியாமையின் அழிவைக் குறிக்க> மேலே தூக்கிய பாதம் முக்தியைச் சுட்டிக்காட்டுகிறது. தீச்சுடர் வளையம் (பிரபாமண்டலம்) கால சுழற்சியும் பிரபஞ்ச இயக்கமும் எனும் அழகியல் உணர்வை உருவாக்குகிறது. இவ்வழகியல் கூறுகள் பார்வையாளருக்குள் ரசபாவத்தை எழுப்பி> கலை வழியாக ஆன்மிக அனுபவத்தை அளிக்கின்றன.

சிவனின் கூத்துத்தத்துவம் தமிழ் சைவ இலக்கியங்களிலும்> குறிப்பாக திருவிளையாடல் புராணம்> தேவாரம்> திருவாசகம் ஆகியவற்றிலும் ஆழமாகப் பிரதிபலிக்கிறது. இந்நூல்களில் சிவன் மனிதர்களுடன் கலந்து கூத்து ஆடும் லீலைகள்> இறைவன் எளிமையையும் அருளையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு கூத்து என்பது இறைவன் - அடியவர் உறவை வலுப்படுத்தும் ஊடகமாக மாறுகிறது. ஆகவே> சிவனின் கூத்துத்தத்துவம் ஆன்மிக உணர்வையும் அழகியலையும் ஒருங்கிணைக்கும் உயரிய தத்துவமாகக் கருதப்படலாம்.

**திறவுச் சொற்கள்**: சிவன்> கூத்துத்தத்துவம்> நடராஜர்> தாண்டவம்> ஆன்மிகம்> அழகியல்> சைவ சித்தாந்தம்> **திருவிளையாடல் புராணம்**

இந்தியத் தத்துவ மரபில் சிவன் நடனத்தின் உச்சக் குறியீடாக விளங்குகிறார். "கூத்து" எனும் சொல் தமிழ்ச் சைவ மரபில் வெறும் கலை வடிவமாக அல்லாது> பிரபஞ்ச இயக்கங்களையும் ஆன்மிக உண்மைகளையும் வெளிப்படுத்தும் தத்துவச் சின்னமாகப் பார்க்கப்படுகிறது. சிவன் நடராஜராக வெளிப்படும் போது> அவனது கூத்து சிருஷ்டி> ஸ்திதி> ஸம்ஹாரம்> திரோபாவம் மற்றும் அனுக்ரகம் ஆகிய பஞ்சகிருத்தியங்களை ஒருங்கே வெளிப்படுத்தும் முழுமையான தத்துவ வடிவமாக அமைகிறது. இவ்வகையில் சிவனின் கூத்து மனித வாழ்வின் தொடக்கம்> நிலை> மாற்றம் மற்றும் விடுதலை ஆகியவற்றை உணர்த்தும் உயரிய ஆன்மிகப் பாதையாக விளங்குகிறது.சிதம்பரம் போன்ற தலங்களில் வழிபடப்படும் நடராஜர் வடிவம்> ஆகாசத் தத்துவத்தை மையமாகக் கொண்டு> காட்சி> ஒலி> அசைவு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் கலை - ஆன்மிக அனுபவத்தை வழங்குகிறது. தீச்சுடர்

வளையம்> அபஸ்மார புருஷன்> உயர்த்தப்பட்ட பாதம் போன்ற குறியீடுகள்> அறியாமையின் அழிவும் ஞானத்தின் உதயமும் எனும் ஆன்மிகக் கருத்துகளை அழகியல் வழியாக எடுத்துரைக்கின்றன. இக்குறியீடுகள் பார்வையாளரின் மனதில் ரசபாவத்தை எழுப்பி> கலை வழியாக தெய்வீக உணர்வை உருவாக்குகின்றன. மேலும்> திருவிளையாடல் புராணம்> தேவாரம்> திருவாசகம் போன்ற தமிழ் சைவ இலக்கியங்களில் சிவனின் கூத்து தெய்வீக லீலையாக வர்ணிக்கப்படுகிறது. இறைவன் மனிதர்களுடன் கலந்து ஆடும் கூத்து> அவனது எளிமை> கருணை மற்றும் அருளை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு> சிவனின் கூத்துத்தத்துவம் ஆன்மிகமும் அழகியலும் ஒன்றிணையும் தளமாக விளங்கி கலை> இலக்கியம் மற்றும் தத்துவ ஆய்வுகளுக்கு வளமான ஆய்வுக் களமாக அமைகிறது.

**சிவன் ஆடிய கூத்துக்கள்**

பரஞ்சோதி முனிவரால் எழுதப்பட்ட சிவனது செயற்கரிய திருவிளையாடல்களை கூறும் திருவிளையாடல் புராணத்தில் ஆடல் செய்தி பற்றி நோக்குவோமாயின் சிவபெருமான் ஆடிய ஆடலின் காரணம், இடம்> முதலானவைகளை கருத்தில் கொண்டு திருவிளையாடல் புராணத்தின் ஊடாக ஆராய்ந்து பார்ப்போமானால் தனது சித்து விளையாட்டுக்களான அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் மூலமாக தமது ஆடலையும் ஆடல் மேல் கொண்டிருந்த அதீத காதலையும் வெளிப்படுத்துக்கின்றார். அத்தோடு தாம் ஆடிய திருக்கோலத்தை பார்ப்பவர்கள் முத்தி அடைவார்கள் என்றும் கூத்தினை காண்பவர்களையும் ஆடவைக்கும் எம் பெருமானின் திருவிளையாடல்கள் மூலம் காணக்கூடியதாக உள்ளது.குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயில் பூத்த குமிழ் நகையும் ஆகாய கங்கையால் பனித்த சடையும், பவளம் போன்ற திருமேனியும் அம்மேனியின் அழகிற்கு மெருகூட்டும் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் கண்டு களிக்கும் பேறு கிட்டுமானால் இவ்வுலகில் எத்தனை முறை வேண்டுமானாலும் பிறக்க ஆவல் கொண்டுள்ளேன். என்று தில்லையம்பலக் கூத்த பொருமானின் கூத்தை கண்ணுற்று மெய்மறந்து பாடுகின்றார் அப்பர் சுவாமிகள் .

நாம் செய்யும் நிருத்தத்திற்குப் பொருள் இல்லாமல் இருக்கலாம் ஆனால் அலகிலா விளையாட்டுடையவனும் உலகப்பொருள் அனைத்தும் தன்னுருவானதுமான எம் பெருமான் நிருத்தம் செய்ய புகுந்தால் ஆயிரமாயிரம் கருத்துக்கள் தாமாக சென்று இந் நடனத்தைச் சரண்புகும் எனலாம்.

**சிவானந்த கூத்து**

திருவிளையாடல் புராணத்திலே ஆனந்த சக்தியினிடமாக உயிருக்கு ஆனந்தத்தை அளிக்கும் கூத்தினை ஆடுவான் (உள்ளமகிழ்ச்சி இறை அன்பினால் வருவது அதுவே ஆனந்தம் அவ் வானந்தமே ஆடுதளம்)

"ஆனந்தமாம் பரதத்துவமாய் ......."

(வெ.கூபடலம் -800)

பாடல்கள் பல்லியங்கள், அகில சாரசரம் யாவும் ஆனந்தமே சக்தியும், ஆன்மாவும் இவ் ஆனந்த கூத்தின் தரிசனமாகும். அண்டங்களாலன சிவன் ஆளுகைக்கு உட்பட்டு (ஆடும்)

"அண்டகூடம் எங்கும் ஊடு போய்"

(வெ.கூ.படலம் 812)

ஐம்புதங்களாலாய பூதாண்டம், பூதக் கலப்பாலாய பேதாண்டம், யோகிகளுக்கு உரிய யோககாண்டம், உயிர்கள் வினைக்கேற்ப போகம், அனுபவிக்கும் போகாண்டம், புனருற்பவத்தின் போது

உயிர்கள் பிறப்பெடுக்கும் மூதாண்டம் முத்தர்களின் முத்தாண்டம் என்பனவாம். வேதமே நாமதாசனம் வேதமே நமது பாதுகை வேதமே சிலம்பு> ஆகமங்கள்> கீதங்கள் ஆறாத சக்கரங்கள் ஐம்பூதங்கள் உயிர் வினைக்கேற்ப புவனங்களில் ஞானக் கூத்தாடிடுவான். இவ்வாறாக இக் கூத்தினை விபரிக்கின்றனர்.

**சுந்தரக்கூத்து**

சொற்பதமாகிய பிரணவத்தில் நடிக்கும் கூத்து அண்டமும்> பிண்டமும் இலிங்கமும் ஒரே அமைப்பை கொண்ட முப்பத்தாறு மாயவடிவங்கள் மிக நுண்ணிய உயிர்கள் தோறும் தான் மிக்க சிறுமையாகிய பரமானுவாய்ச் சென்று தங்கும் நுண்மையே அணிமா ஆகும்.

இதனை திருவிளையாடல் புராணத்தில்

“அறவும் சிறிய உயிர் தொறும் தான் பரம....”

(அ.சி.உப -1781)

மணிதத்துவம் முதல் சிவதத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களில் உள்ளும் புறமும் நீங்காமல் நிறைந்து ஆக்கல்> அழித்தல்> காத்தல் எனும் முத் தொழில்களையும் தம் இச்சையின் படியே இயற்றி சூரியன் முதல் ஒன்பது கோள்களும் ஓவல் கேட்க வீற்றிருப்பதும்> பிரபஞ்சத்தின் ஏழு அண்டங்களும், உடலின் மூலாதார முதல் சகஸ்ரதளம் (தலையுச்சி) ஈறான ஏழு அண்டங்களும் மாயாரூபமானதால்

“ஈசன் என முத்தொழிலும் தன் இச்சை வழி செய்து...”

(அ.சி.உ.ப -1786)

இதிகாச மண்டலமெனும் தூய பரவெளியிலும் ஆடுவார். அண்டங் கடந்த பொருள் அளவிலதோர் ஆனந்த வெள்ளப்பொருள் என்கின்றது. திருப்பல்லாண்டு சுந்தரக் கூத்து பற்றி கூறுகிறது.

**பொற்றில்லை கூத்து**

பிண்டத்திலுள்ள ஆறாதாரங்களின் ஒளிகளும் சேர்ந்து நெற்றிக்கு நேரே விளங்கும். பொன் ஒளியில் நிகழ்வது இது போன்று அண்டத்திலும் நிகழும் இது மூலாதாரம் முதல் சகஸ்ரதளம் (தலையுச்சி) முடியவுள்ள ஏழு அண்டங்களும் பொன்னம்பலமாக ஐவகை ஆகாயங்களும் (பூத> குணமய> குணரதித> சூரிய> சிதாகாயங்கள்) அவன் நடிக்கும் இடமாக அக்கினி கலையில் விளங்கும் சக்தியே திருவம்பலமாகக் கொண்டு ஆடுவான். இருதயத்தனாமாகிய அநாகம் தில்லையில் (சிதம்பரம்) அங்கு சபாபதி ஆடிய ஆடல் தில்லைக்கூத்து>பொற்றில்லை கூத்து எனவும் அங்கு எழுந்தருளி இருப்பவர் சபாபதி எனவும் பெயர் பெறுவர். பரமகருணாநிதியாகிய சுவாமி பக்குவான்மாக்களுக்குப் பாசம் நீங்கும் வண்ணம் நிருத்தம் செய்து அத்திருக்கோலத்தோடு எந்நாளும் நின்றருள வேண்டும். இக் கூத்தினை பாண்டிய நாட்டிலே தில்லைக் கோயிலில் காணலாம்.

மேலும் இக்கூத்தினைப் பற்றி "ஆதிபரன ஆட அங்கைக் கன்வாட (சுழுமுனையின் சுந்தர மண்டலம்) ஒதுஞ் சடையாட உன்மத்த குன்றாட (சிவனின் சடாபார ஒளிக்கீற்றசைய உயிர்கள் பித்துப்பிடித்தாட) நாதமோடாடினான் நாதாந்த நட்டமே" (உயிர்கள் நாதாந்தமுத்தி பெறும் படியாக ஆடினார்) சிதாகாயத்திலாடும் திருக்கூத்தை கண்டவரே ஞானாந்தம் பெற்றவர்கள் சிவநடனத்தை கண்டவர் ஐயமகன்று தெளிவுறுவார்.

“கண்ட மன்ற மிதயமாஞ் திருக்காளாத்தி.....” (வெ.அ.கூ.ப 804)

**அற்புதக் கூத்து**

சொல்லில் அடங்காத பரவசம் அடைவிப்பது அற்புதுக் கூத்து எனலாம். சிவனின் எண்குணங்கள் பொருந்திய நிலையில் ஆடும் கூத்தே அற்புதக் கூத்து. சிவன் ஆடும் நிருத்தம் மிக முக்கியமாயும் ஆற்புதமாயும் இருக்கும். இது போகமோசங்களையும் இட்ட சித்திகளையும் ஒருங்கிணைத்து நிருத்தம் செய்து பிரமாண்டம் பிரமாவின் சரீரம் கீழேழுலகமும் அரைக்குக் கீழ்ப்பட்டவனாகிய மூலாதாரம் சுவாதிப்பட்டணம்> மணிபூரகம்> அநாகதம்> விசுத்தி> ஆஞ்ஞை> பிரம தந்திரம் போன்றவற்ச் சருவலோகங்களிலும் ஆன்மதத்துவத்தில் அகாரமும் வித்தியா தத்துவத்தில் உகாரமும் சிவதத்துவத்தில் மகாரமும் எல்லா தத்துவங்களிலும் விந்துவும் நாதமும் தோன்ற சிவனானவன் அற்புத கூத்தாடினாள்.

"அரைக்குமே லுலகே...."

(வெ.அ.கூ.ப -803)

கீழ்த்திசையிலே ஒரு வெள்ளியம்பலமும் அதனிடத்தே ஒரு மாணிக்க வேதிகையும் அவ் வேதிகையின் மேல் ஞானப் பேரொளி வடிவாகத் தோன்றி பூதகணங்கள் மொத்தையும் தண்ணுமையும் முழக்க> திருநந்தி தேவர் முழவும் தாக்க தேவர்கள் பூமாரி பொழிய சிவபெருமான் திருத்தம் செய்தும் குலோத்துங்க பாண்டியனும் மதுரை நகரத்தில் உள்ளோடும் சிவபெருமானின் ஆடலை நோக்கி கண்ணீர் வெள்ளத்தாழ்ந்து அவருடைய திருவடிகளை வணங்கி கீதம்பாடி> ஆனந்த கூத்தாடி துதித்தார்கள்

"முந்துறு கணங்கள் மொந்தை....."

(வெ.அ.கூ.ப 809)

சூரியர்> சந்திரர்> அக்கினி என்பவற்றை முக் கண்களாகவும் ஆகாய வெளியின் காரிருட் திசைகளே கைகளாகவும் கொண்டு ஆடுவான் அண்டமும் பிண்டமும் அவனாடும் இடங்களாகும்.

"பொருங்டகனிநருந்த செந்தீப்...."

(வெ.அ.கூ.ப 811)

**பொற்பதிக கூத்து**

சிரசின் மேல் பொன்னொளியில் விளங்குவது பொற்பதிக கூத்தாகும். சிவபெருமானின் சிவலிங்க திருமேனியில் உச்சி ஈசானம் கிழக்கு தற்குடம் தெற்கு அகோரம் வடக்கு - வாமதேவம் மேற்கு - சத்தியோகதாதம் பிண்டமாகிய உடலிலும் அவ்வாறே இனம் கொண்டு ஆடுவர்.

சிவகாமங்கள் திருவாலவாயுடையாருடைய உச்சி முகமாகிய ஈசானத்தில் இருந்தும், இருபத்தொரு பேதமுடைய இருக்கு வேதங்கள் கிழக்கு முகமாகிய தற்புருடத்தினின்றும். நாற்றொரு பேதமுடைய யசுர்வேதம்> தெற்கு முகமாகிய அகோரத்தினின்றும்> ஆயிரம் பேதமுடைய சாமவேதம் வடக்கு முகமாகிய வாமதேவத்தினின்றும்> ஒன்பது பேதமுடைய அதர்வ வேதம் மேற்கு முகமாகிய சத்தியோசாதத்தினின்றும் தோன்ற இறைவன் விளங்கி பொற்பதிக கூத்தாடி வேதமே பிராமனம் வேதத்தை முதன் நூலாகக் கொண்டமையினால் ஸ்மிருதிபிரமாணம் சகமனைத்துஞ் சிவம் என்று ஞானமே போகமோசங்களைக் கொடுக்கும் அந்த ஞானத்திற்கு ஒப்புவமை வேறொன்றுமில்லை எனக்கூறி சிவலிங்கத்தில் மறைந்தருளினார்.

"இன்னவை யிரண்டு மினருள் வலியா லீன்றநான்...."

(...- 1186)

"அருமறை நால்வே நாகையால் வருண..."



Tamilmanam

**ஊசி மேல் நின்றாடிய ஆடல்**

மதுரை நகரிலே சோமசுந்தரக் கடவுள் ஒரு சித்தர் வடிவங்கொண்டு வட்டமாகிய குஞ்சிச்சடையையும்> விபூதி தரித்த திரு நெற்றியையும் படிக்குண்டலந் தரித்த திருச்செவியையும் படிகமாலை தரித்த திருமிடறும் பூணூல் அணிந்த திருமார்பும்> வீபுதிப் பொக்கணங் தூக்கிய வலத்தோளும்> யோகப்பட்டந் தரித்த இடத்தோளும்> நட்டுவாங்கத்தையும் இடையிடையே பொன் கட்டிய பிரம்பையும் தரித்த திருக்கைகளும்> புலித்தோலரை ஞானும்> புலித்தோற் கௌபீனமும்> புலித்தோலுடையும்> உதரபங்தனமும்> கிண்கிணியையுஞ் சிலம்பையுந் தரித்துப் பாதுகை மாட்டப் பெற்ற திருவடிகளும் திருப்புன்முறுவலோடு குறுவேர்வை அரும்புந் திருமுகமும் உடையவராகிக்> கடைவீதி> தெரு நாற்சந்தி> குளிகை> உபரிகை> மாளிகை முதலிய இடந்தோறுஞ் செல்வாராயினார். தெற்கே போயிருப்பவர் போல வடக்கே போயிருப்பார். கிழக்கே இருப்பவர் போல மேற்கே போயிருப்பார். யாவரும் தேடிக் காணும் வண்ணம் மறைவார். அதிதூரத்தில் உள்ள பருவத்தை அதி சமீபத்தில் வருவிப்பார், அதி சமீபத்தில் உள்ள பருவத்தை அதிதூாரத்திலே போக்குவார். முதியோரை இளையோரும் இளையோரை முதியோருமாக்குவார். ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணுமாக்குவார். மலடியை பிள்ளைபெறவிப்பார். கூன் செவிடு ஊமை குருடு முடங்களைத் தீப்பார். வெள்ளி> செம்பு> இரும்பு> ஈயம்> எனும் நான்கு லோகங்களையும் பொன்னாக்குவார். செல்வர் வீட்டுப் பொருளெல்லாம் வறியவர் வீட்டில் எய்துவிப்பார். ஒருவரோடு ஒருவர் சினேகிதராயுள்ளவர் தம்முள்ளே பகைத்துப் போர் செய்யப் பண்ணுவார் எட்டி மரத்திலே நறுங்கனி பழுக்கச் செய்வார் நீர் வராக் காலத்தில் வைகையாற்றிலே நீர் வருவித்து மீள வற்றச் செய்வார். ஓடை பொய்கையிலுள்ள நன்னீரை உவர்நீரும் கடலில் உள்ள உவர்நீரை நன்னிருமாக்கவார். இவ்வாறு பல சித்து விளையாட்டுக்களை ஆனந்த கூத்தாடி இசைகவிபாடியும் செய்து வந்தார் எம்பெருமான்.மந்திரக் கோலினை ஆகாயத்திலே வீசி நிறுவி அக்கோலின் மேல் ஊசியினை நாட்டி ஊசியின் மேலே பெருவிரல் ஊன்றி குறைபாடில்லாமல் ஆடுகின்றனர். ஊசியின் மேல் தலையையும்> தலைகீழாகத் தனது சிவந்த பாதங்களாகிய தாமரைகள் ஆகாயத்திலே மலரச் சுழன்றாடி> ஆகாயத்திலே கருடனைப் போல் பறந்தும் மேகத்தைப் பிடித்து இடியோடு நிரினைப் பிழிந்து மீண்டும் ஆகாயத்திலே விட்டு இரவிலே தோன்றும் பொருளினை பகலிலும் பகலிலே தோன்றும் பொருளினை இரவிலும் அக்கினித் தம்பந் சலத்தம்பம்> வாயுத்தம்பம் செய்வார். கல்வி இல்லாதவர்களுக்கு நாக்கிலே வீபுதியனைச்சிதறி எல்லா நூல்களும் விளங்க செய்வார். இவ்வாறு செய்து தமது திறமையினையும் ஆனந்த திருவிளையாடலையும் காட்டினார் என்பதனை பரஞ்சோதி முனிவர்.

"வீதி மாத்திரக் கோலினை விண்ணில் நட்டதன் மேல்
ஊசி நாட்டுயிட்டுசி மேற் பொருவிரலூன்றி யாசிலாடியும்
ஊறிகீழ்க்காக மாசில் சேவடிப் போதுவான்
மலர்ந்திடச் சுழன்றும்"

(எ.வ.சி.படலம் 1345)

**வெள்ளியலம்பத்தில் ஆடிய திருக்கூத்து**

சிவபெருமான் தடாதப் பிராட்டியாரைத் திருமணம் செய்தபின் வியாக்கிரபாத மகாமுனிவரும் பதஞ்சலி பரமகருணாநிதியே கனகசபையிலே நடிக்கின்ற உம்முடைய திருநடனத்தைத் தரிசனம் செய்ய

வேண்டும். எனக் கூறினார். உலகமே வடிவமாகவுடைய விராட்புருடனுக்கு சிதம்பரம் இருதயத்தானம். இம்மதுரை துவாதசாந்தத்தானம் ஆதலால் சிதம்பரத்திலும் மதுரையி மிக மேலையது. இங்கே நாம் செய்யும் நிருத்தம் மிக முக்கியமாகவும் அற்புதமாயும் இருக்கும். அது போக மோட்சங்களையும் இட்ட சித்திகளையும் கொடுக்கும் இந்நிருத்தத்தை இங்கே நடம் புரிவோம் எனக் கூறினார். முனிவரும் எம்பெருமானை வணங்கி நின்றுபிரமாண்டம் பிரம்மாவின் சரீரம். கீழேழுலகமும் அரைக்கு கீழ்ப்பட்டனவாகிய காற் பெருவிரல்> புறவடி> பரடு கணைக்கால்> முழந்தாள்> தொடை நடு> தொடை மூலம்> மேலேழுகமும் அரைக்கு மேற்பட்டனவாகிய மூலாதாரம் சுவாதிட்டானம்> மணிபூரகம்> அநாதகம்> வாசுத்தி> ஆஞ்ஞை> பிரம தந்திரம் என்பனவாகும்.

கருணாநிதியாகிய சிவபெருமானின் சங்கற்பமாத் திரத்தினாலே விமானத்திற்கு கீழ்த் திசையிலே ஒரு வெள்ளி யம்பலமும் அதனிடத்தே ஒரு மாணிக்க வேதிகையும் தோன்றின. சிவபெருமான் அவ்வேதிகையின் மேலே ஞானப் பேரொளி வடிவாய்த் தோன்றி பூதகணங்கள் மொந்தையும்> தண்ணுமையும் முழக்க. திருநந்தி தேவர் முழவம் தாக்க, விட்டுணு இடக்கையாக்க தும்புருநாதர் இசைபாட பஞ்சதுந்துபிகள் ஒலிக்க

"முந்துறு கணங்கன மொந்தை தண்ணுமை முழக்கஞ் செய்ய
நந்திமா முழுவந் தாக்க நாரண னிடக்கை யார்ப்ப
வந்துகள் தருவ நூலின் மாபுளி யிருவர் பாட
ஐந்ததந் துபியுங் கல்லென் றுந்தில முழக்கங் காட்ட"
(வெ.அ.கூபடலம் 809)

என பரஞ்சோதி முனிவர் கூறியிருக்கின்றார்.

**கால்மாறி ஆடிய கூத்து**

சிவபெருமான் ஆனந்த வடிவமாய் வெள்ளியம்பலத்தின் கண் நின்று செய்தருளிய திருநிருத்தத்தில் அன்பு வைத்த இராசசேகர பாண்டியன் பரத நூலென்று விட்டு மற்றைய அறுபத்து மூன்று கலைகளையும் கற்றுச் செங்கோலாட்சி புரிந்து வந்தான். இறைவன் திருக்கூத்தை கண்டு அப்பரதத்தினை கற்பது மரியாதைக் குறைவு என்று விட்டுவிட்டான். அக்கலை பரமனுக்கே உரியது பாமரனாகிய தான் கற்பது தவறு என்று பரதம் ஒன்று மட்டும் பயிலாதவனாக இருந்தான்.அவன் வாழ்ந்த காலத்தில் சோழநாட்டு அரசன் கரிகாற் சோழன் பரதத்தையும் கற்றிருந்தான் அவன் நாட்டில் இருந்து வந்த புலவன் ஒருவன் அதை ஒரு குறையாக சுட்டிக் காட்டினான். "சோழன் அறுபத்து நான்கு கலைகளையும் கற்று இருக்கின்றான். நீ ஒன்று குறைவாக கற்றிருக்கின்றாய் பரதம் உனக்கு வராதா?" என்று தூண்டிவிட்டான்.

"அறுபது நல் கலைகளும் வரும் வரா உனக்கு ஒன்று
அது பரதநூல் தெரிந்திலை"
(கா.மா.ஆ.ப -1465)

மானம் மிக்க அவன் அச்சொற்களை தாங்கிக் கொள்ள முடியவில்லை. வயது ஆன போதும் பொருட்படுத்தாமல் தக்க ஆசிரியர்களைக் கொண்டு உடம்பினை வளைத்து அப்புதிய கலையினைத் கற்க தொடங்கினான். அந்த அற்புதக் கலையினைக் கற்க உடல் உழைப்பும் பயிற்சியும் தேவை

Tamilmanam

என்பதனை உணர்ந்தான். தன் உடம்பு களைத்து நோதலை அறிந்தான் உடம்பெல்லாம் வலி எடுத்தது ஆனாலும் பரதநூலினை கசடறப் பயின்றான். இறைவன் பரதம் ஆடும் போது வலக்காலில் நின்று ஆடுவதைக் கண்டு இவ்வாறே காலை மாற்றிக் கொள்ளாமல் ஆடினால் அவருக்கு எவ்வளவு வருத்தம் ஏற்படும் என்று நினைத்துப் பார்த்து சிவராத்திரியிலே திருக்கோயிலை அடைந்து சிவபெருமானுக்குநான்கு யாமமும் விசேட பூஜை செய்வித்து வெள்ளியம்பலத் திருக்கூத்தைத் தரிசித்தும் வணங்கி கண்ணீர் சோரக் சிரசின் மீது கைகூப்பி நின்று எம்பெருமானே நின்றதிருவடியினை எடுத்து வீசி எடுத்த திருவடியினை கீழே ஊன்றி இன்றைக்கு அடியேன் காணும்படி மாறியாடித் தமியேனுடைய வருத்தம் முழுவதையும் தீர்த்தருளும், அவ்வாறு மாறி ஆடாவிட்டால் தன் உயிரை மாய்த்துக் கொள்வதாக மருட்டினான். வாளைத் தயாராகக் கையில் வைத்துக் கொண்டான். சிவபெருமான் எதிரே தன் உடைவாளை நாட்டி அதன் மேல் குப்புற விழப்புகுந்தான் புகுமுன் அன்பிற் கெளியராகிய சிவபெருமான் தமது இடது பாதத்தை ஊன்றி வலப்பாகத்தினை எடுத்து வீசி மாறியாடிக் காட்டினார். பாண்டியனுடைய மனக்கவலையையும் மும்மலங்களையும் ஓட்டினார். அவனை பரமானந்த கடலினுள் வீழ்த்தினார். தன் மனம் வாக்கு காயம் எனும் மூன்றுஞ் சிவபெருமானுடையதே அன்பே வடிவமாய் நின்றான்.

“நாட்டினான் குறித்துப் பாய நண்ணும் முன்கிடத்தாள் ஊன்றி நீட்டினான் வலத்தாள் வீசி நிர்மலன் மாறியாடிக் காட்டினாள்.....”

(கா.மா.ஆ. படலம் 1481)

இவ்வாறாக திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் இறைவனின் ஆடலை வெளிப்படுத்துகின்றார்.

**பாண்டரங்க கூத்து**

முப்புர தகனத்தின் போது தகன்ற சாம்பலை நீறென அணிந்தாடிய கூத்து. வானோராகிய தேரிலே நான்மறைகளாகிய குதிரைகளைப் பூட்டிநின்ற பிரம்மன் முன்னாக சிவாடியது பார்வதி சிவமாகச் சிவன் வெண்ணீற்று ஆடியது பாண்டரங்கம் எனப்படுகின்றது திருவிளையாடற் புராணம்.

பளிங்கு நிறத்தினதாய் வடகிழக்கு நோக்கிய ஈசானமுகமும் பொன்னிறத்தினதாய் கிழக்கு நோக்கிய தற்புருட முகமும் கருநிறத்தினதாய் தெற்கு நோக்கிய அகோர முகமும் செந்நிறத்தினதாய் வடக்கு நோக்கிய சத்தியோ முகமம் பால் நிறத்தினதாய் மேற்கு நோக்கிய சத்தியோசாத முகமும் ஆகிய ஐந்து திருமுகங்களையும் முகந்தோறும் மும்மூன்றாகப் பதினைந்து கண்களையும் பளிங்கு நிறத்தினை திருமேனியையும் விரித்த கடையினையும் பத்து திருக்கரங்களும் கொண்டு வெண்ணீறணிந்து ஆடினார். உடைய

“புரகரனிச்சா ஞானக் கிரியையாய்ப்.....”

(இ.மு.வ.படலம் -1069)

சர்வசங்கார காலத்திலே மாயாதோற்றங்களைச் சுட்டெரித்துத் தானே ஈறாயிருந்த முதலாகிய சிவன் அழியாத ஆன்மாக்களையும் மாயையின் சூக்கும் வடிவையும் மீண்டும் தூலமாகப் புனருற்பவம் செய்யும் வரை நீற்றுவடிவிற் தன்னோடு தாங்கியுள்ளான். ஆன்மா அழியாது சர்வசங்காரத்திலே தன் அறிவு> இச்சை> செயல்களின்றி இருக்கும். அதன் எஞ்சிய வினை புத்தி மாயை சிவனின் உடம்பாயிருக்கும். இது அதற்கு ஓய்வு காலம் "நில்லாவுலகத்து நிலைபேறு அடைய " என்றும் "மன்னாவுலகத்து மன்னுதல் குறிக்க (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்> 1957.ப.302) என்றும் சுட்டுவதே வெண்ணீறுநிலையாமையை நினைத்தாலே நிம்மதியான வாழ்வு வாழலாம். பிரபஞ்சத்திற்கு

முதற்காரணம் மாயை துணைக்காரணம் சக்தி நிமிர்த்த காரணம் சிவன்> பாண்டரங்கம் ஆடியபின் தானே முதலென அழிவின்றி இருப்பவன் என்பதனை உணர்த்துவதாக அமைகின்றது.மதுரையிலே முப்புரம் எரித்த சிவனாரை அடையாளம் காட்டும் படியாக அவருடைய அம்பில் மகாவிஸ்ணு உருவமும் அம்பு நுனியில் அக்கினியும் காணப்படும் சிற்பம் நான் மாடக் கூடல் தூண்களில் அமைந்திருக்கின்றது. கருணைக் கடலாகிய சிவபெருமானின் இடது கண்போல காணப்படும் திருவிளையாடல் புராணத்திலே அகக்கூத்து> புறக்கூத்து பற்றிய கூத்துக்கள் இருந்தன. தாண்டவம். நிருத்தம்> நாட்டியம் எனும் மூன்று கூறுகளாக காணப்பட்டது. இவற்றுள் தாண்டவம்> நிருத்தம் ஆகியவை அகக் கூத்துக்கள் என வரையறுக்கப்பட்டுள்ளன.அகப்பெருளாகிய காதல் உணர்வுகளைப் பாடு பொருளாகக் கொண்டு ஆடப்படும் கூத்து என விபரிக்கலாம் இக்கூத்து தேசி அகக்கூத்து மார்க்க அகக்கூத்து என இருவகை அகக்கூத்துக்கள் இருந்தது. இவ்வகையான அகக்கூத்துக்களுக்கும் தனித்தனி பாடல்களும் தனித்தனி ஆடல் முறைகளும் இருந்தன.மார்க்க கூத்து பரதநாட்டிய சாஸ்திர விதிமுறை தவறாது கரண அங்ககார நேரக வித்தியாசங்களுடன் நிருத்தம் செய்தல் எனவும் தேசிக் கூத்தானது மார்க்கியும் லோக தர்மியும் கலந்து உருவாகிய நிருத்திய முறைகள்.

"நிருத்தம் ஆகிய தாண்டவம் அகமார்க்கம் நிகழ்ந்திடும்"

(கா.மா.ஆ.ப -1469)

இவ்வாறு அகக் கூத்தை திருவிளையாடல் புராணம் வரையறுக்கின்றது.

இவற்றிற்கு தாளம், கொட்டு (முழக்கு) பாடல் என்பன அவசியம்.

**கொடுகொட்டி ஆடிய கூத்து**

திரிபுரம் தகனம் செய்த ஈமத்தில் உமையவள் தாளம் செலுத்த இறைவன் கை கொட்டி ஆடிய ஆட்டம் என்று கூறப்படுகின்றது. பிரபஞ்ச ஒடுக்கத்தின் போது முற்பத்தாறு மாயா தத்துவங்களும் அழிந்த நிலையில் நின்றாடும் கூத்து. ஊழிக்கூத்து எனவும் சொல்லப்படுகின்றது. பல கொடும்பறைக் கருவிகளை கொட்டிக் கொண்டாடுவது "கொண்டபாணி கொடு கொட்டி தாளங்கள்" எனத் திருமுறையில் கூறியவாறு சிவன் பல்வகை தாளங்களுடன் ஆடியதே கொடு கொட்டியாகும். முப்புரங்களையும் சிவபெருமான் எரித்த காலத்தில் வெற்றிக் களிப்பில் ஆடிய தாண்டவம் திரிபுர தாண்டவம் இதனை கொடுகொட்டி என்றும் அழைப்பார். என உரையாசிரியர் குறிப்பிடுகின்றார். இவ்வடிவத்தை காஞ்சி கைலாசநாதர் கோவில்களில் காணலாம்.

"ஞாலம் முடிக்கு மூழிநாளுனர்....."

(திருமண படலம் -709)

இவ்வாறாக சிவபெருமானின் சித்து விளையாட்டுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படம் சிவ ஆடல்களை திருவிளையாடல் புராணத்தின் வாயிலாக அறியலாம்.

**முடிவுரை**

சிவனின் கூத்துத்தத்துவம் என்பது கலை> ஆன்மிகம்> தத்துவம் ஆகிய மூன்றும் ஒன்றிணையும் உயரிய வெளிப்பாடாகும். நடராஜரின் தாண்டவம் மூலம் பிரபஞ்சத்தின் இயக்கங்கள்> மனித வாழ்வின் நிலையற்ற தன்மை மற்றும் முக்தி நோக்கிய ஆன்மிகப் பயணம் ஆகியவை குறியீடுகளின் வழி தெளிவாக உணர்த்தப்படுகின்றன. சிருஷ்டி முதல் அனுக்ரகம் வரை உள்ள பஞ்சகிருத்தியங்கள்> கூத்து வழியாக மனித மனத்திற்கு எளிமையாகவும் ஆழமாகவும் எடுத்துரைக்கப்படுகின்றன.

Tamilmanam

திருவிளையாடல் புராணம் மற்றும் தமிழ் சைவ இலக்கியங்களில் காணப்படும் சிவனின் கூத்து> இறைவன்-அடியவர் உறவை நெருக்கமாக்கும் தெய்வீக லீலையாக விளங்குகிறது. இக்கூத்துகள் இறைவனின் எளிமை> கருணை> அருள் ஆகிய பண்புகளை வெளிப்படுத்தி, பக்தியை அறிவுடனும் ரசத்துடனும் இணைக்கின்றன. அதேசமயம்> சிதம்பர நடராஜர் உருவத்தில் வெளிப்படும் அழகியல் கூறுகள்> கலை வழியாக ஆன்மிக அனுபவத்தை அளிக்கும் வல்லமை கொண்டவை என்பதையும் இவ்வாய்வு உணர்த்துகிறது.

எனவே> சிவனின் கூத்துத்தத்துவம் வெறும் புராணக் கருத்தாக அல்லாமல், மனித வாழ்விற்கு வழிகாட்டும் தத்துவமாகவும்> கலைக்கு ஆன்மிக அர்த்தம் அளிக்கும் ஆதாரமாகவும் விளங்குகிறது. ஆன்மிக உணர்வையும் அழகியலையும் ஒருங்கிணைக்கும் இத்தத்துவம்> சமகாலக் கலை ஆய்வுகளிலும்> நடன நிகழ்த்தல்களிலும் தொடர்ந்து உயிர்ப்புடன் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை நூல்கள்**


01. ஆறுமுகநாவலர்> ஸ்ரீலஸ்ரீ. (1957)> திருவிளையாடல் புராண வசனம்(முதற்பதிப்பு). சென்னைப்பட்டினம்: வித்தியா நூபாலனயந்திரசாலை.
02. இரகுமான்>சே முனைவர். (2008). நடனக் கலைச்சொல் களஞ்சியம். சென்னை: சித்ரா அச்சக உலகம்.
03. குமரகுருபரர். (1965). நீதி நெறி விளக்கம் (முதற்பதிப்பு). சென்னை: சென்னைப்பட்டினம் தரமணி.
04. குலேந்திரன்> ஞானா டாக்டர். (1994), பரத இசை மரபு (முதற்பதிப்பு). தஞ்சாவூர் 05: தமிழ்ப்பல்கலைக்கழகம்.
05. கைலாசநாதக் குருக்கள்> கா. M.A.ph.D. (1963). சைவத் திருக்கோவிற் கிரிகை நெறி. செட்டியார் தெரு கொழும்பு: எ.வி.ஆர்.ஏ பில்டிங்ஸ்.
06. சண்முக சுந்தரம்> சோ. (2008). சீர்காழி மூவர் கீர்த்தனைகள்> சென்னை: ரோகினி பதிப்பகம்.
07. சிவத்தமிழோன்> எஸ். (1965). சைவசித்தாந்த விளக்கம். சென்னை நகர்: நர்மதா பதிப்பகம்.
08. சீனிவாசன்> ரா. (1998). திருவிளையாடற் புராணம்(இரண்டாம்பதிப்பு). சென்னை: சித்ரா அச்சக உலகம்.
09. சுப்பரமணிய அய்யர்,என். (1955) சிதம்பர இரகசியம். சென்னைப் பதிப்பகம்.
10. சுவாமி வேதாசலம்> (1958). சிவஞானபோத ஆராய்ச்சி. திருநெல்வேலி: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
11. சொர்ணலிங்கம்>செ. (2013)>எழிசையாய் இசைப்பயனாய் (முதற்பதிப்பு). கொழும்பு: சிவத்திருமன்றம்.
12. பரஞ்சோதி முனிவர்> திருவிளையாடல் புராணம் (இரண்டாம் பதிப்பு). விவேக விளக்க அச்சக் கூடம்.


**Copyright Holder:**
© Author(s) (2026).
**First Publication Right:**
© Tamilmanam International Research Journal of Tamil Studies
**This article is under:**

Tamilmanam